RBI/2006-07/139

DBOD.NO.LEG.BG.32/09.07.005/2006-07 அக்டோபர் 04, 2006

பிராந்தியக் கிராமப்புற வங்கிகள் தவிர
அட்டவணையிலுள்ள அனைத்து வங்கிகளுக்கும்

அன்புடையீர்,

**வாடிக்கையாளர் சேவை-சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் தனிநபர்களுக்கு கணக்குப் புத்தகம் வழங்காமலிருத்தல்**

வாடிக்கையாள் கணக்குப் புத்தகங்களை அநேக வங்கிகள் தங்களது சேமிப்புக் கணக்கு (தனிநபர்கள்) வைத்திருப்பவர்களுக்கு வழங்காமலிருப்பதாகக், குறிப்பாக மூத்த குடிமக்கள் சங்கங்களிலிருந்து புகார்கள் வருகின்றன. கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளருக்குக் கஷ்டத்தைக் கொடுக்கும் இந்த நடவடிக்கையை வங்கிகள் தாங்களாகவே மேற்கொண்டுள்ளன என்பதைச் சுட்டிக் காட்டுகிறோம். 2004 ஏப்ரல் 10 தியிட்ட எங்கள் சுற்றறிக்கை DBOD.NO.LEG.BC74/09.07.005/2004-05 ல் கூறியிருந்ததைப் போல் மாதாந்திரக் கணக்கு அறிக்கையைக் கொடுக்காமல் காலாண்டுக் கணக்கு அறிக்கையாக வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதாக அறிகிறோம்.

2. கணக்கு அறிக்கையை விட, கணக்குப் புத்தகம் என்பது சிறியதாக கைக்கு அடக்கமாக, விபரங்களை உடனுக்குடன் எளிதாகப் புரிந்து கொள்ளும் தன்மையுடையதாக, குறிப்பாக சிறு வாடிக்கையாளர்களுக்கு மிகவும் உதவியாக உள்ளது. கணக்கு அறிக்கைகளைப் பயன் படுத்துவதில் சில சிக்கல்கள் உள்ளன. (அ) தொடர்ச்சியாக அவைகளை கோப்புகளில் சேர்க்க வேண்டும் (ஆ) முந்தைய கணக்கு அறிக்கையின் இறுதியான நிலுவை தற்போதையதின் முதன்மையாக இருக்கிறதா என்று சரிபார்க்க வேண்டும் (இ) கணக்கு அறிக்கையைத் தபாலில் அனுப்புவதும், அது கிடைக்காமல் போவதற்கு வாய்ப்பு இருப்பதையும், அதனால் நகல் கேட்கும் பொழுது ஏற்படும் செலவினங்களும் இன்னல்களும் (ஈ) நிறைய சிறு வாடிக்கையாளர்கள் இன்னமும் இணைய தளம், கணினி ஆகியவற்றோடு தொடர்பு இல்லாமல் இருத்தலும் போன்ற பல சிக்கல்கள் உள்ளன.

3. எனவே சேமிப்பு கணக்கு வைத்திருக்கும் தனிநபர்களுக்கு வங்கிகள் கணக்குப் புத்தகங்களையே வழங்கிட வேண்டும். ஒரு வேளை கணக்கு அறிக்கை அனுப்பும் பழக்கம் ஏதேனும் ஒரு வங்கிக்கு இருந்தால், அதை வாடிக்கையாளர் விரும்பினால் மாதா மாதம் 2004 ஏப்ரல் 10 தேதியிட்ட எங்கள் சுற்றறிக்கை DBOD.LEG.BC.74/09.07.005/2004-05ன்படி கணக்கு அறிக்கையை அனுப்பலாம். கணக்குப் புத்தகம் அல்லது மாதாந்திர கணக்கு அறிக்கை இந்த

இரண்டுமே வாடிக்கையாளருக்கு இலவசமாக வழங்கிடல் வேண்டும்.

4. கிடைத்தைமைக்கு ஒப்புதல் அளிக்கவும்.

அன்புடன்

பிரசாந் சரண்
தலைமைப் பொது மேலாளர் பொறுப்பு